# நாத்தண்டிய பிரதேச சபை

## புத்தளம் மாவட்டம்

------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 24 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 21 திகதியும், கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜுலை 27 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

------------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நாத்தண்டிய பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

--------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்வரும் ஆண்டிற்கான செலுத்தியிருந்த வீத வரி ரூபா 1,732,404 தொகை மீளாய்வாண்டிற்கான வீத வரி பெறுவனவு என கணக்கீடு செய்திருந்தமையால் சபையின் நடைமுறை பொறுப்புக்கள் அதே தொகையால் குறைவாக மற்றும் ஆண்டிற்கான வீத வரி பெறுவனவுகள் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) பங்களிப்புத் தொகை செலுத்துவதில் தாமதம் காரணமாக ஊழியர் சேமலாப நிதியத்தினால் விதிக்கப்பட்டிருந்த ரூபா 91,060 இற்கான மிகை விதிப்பு தொடர்பாக ஏற்பாடு மேற்கொள்ளப்படாமையால் ஆண்டிற்கான மிகை அதே பெறுமதியால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) சபைக்குச் சொந்தமான 06 நிரந்தர, நிர்மாண வேலைகளின் பெறுமதியை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஈ) நிதிக் கூற்றுக்களில் நடைமுறை சொத்துக்கள் மற்றும் நடைமுறை பொறுப்புக்கள் என்பவற்றில் ஒரு வருட காலத்தை மிகைத்து காணப்படும் ரூபா 72,751,453 இற்கான கடன்பட்டோர் மீதிகள் மற்றும் ரூபா 10,656,474 இற்கான கடன்கொடுத்தோர் மீதிகள் காணப்பட்டன.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

------------------------------------------------------------------------------------------

நிதிக் கூற்றுக்களில் அடங்கியுள்ள 07 கணக்கு விடயங்களின் மீதிகளின் பெறுமதி அதனோடு தொடர்புடைய பட்டோலையில் காணப்படும் மீதிகளுடன் இணங்கியிருக்கவில்லை அத்துடன், அவ்வாறு இணங்கியிருக்காத வித்தியாசத்தின் பெறுமதி ரூபா 19,308,784 ஆகும்.

1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

----------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாகாண பிரதான செயலாளரிடமிருந்து 2002 ஆண்டு தொடர்பாக 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 279,583 ஆக காணப்பட்டதுடன் அப் பணத்தை அறவீடு செய்தல் உறுதியற்ற நிலையில் காணப்பட்டது.

(ஆ) 2005 ஆண்டு முதல் 17 வரி செலுத்துவேர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவை வாடகை ரூபா 876,437 தொகையினை அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) 1996 ஆண்டு முதல் 2006 ஆண்டு வரை பெற வேண்டியிருந்த முத்திரை ரூபா 11,534,507 தொகையினை சபைக்கு பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) 2000 ஆண்டு முதல் 2004 ஆண்டு திசெம்பர் 31 திகதி வரை இலங்கை மின்சார சபை, வென்னப்புவ மின் பொறியியலாளர் அலுவலத்தில் இருந்து கிடைக்க வேண்டிய வீதி விளக்கு மீளளிப்புத் தொகை ரூபா 1,167,000 தொகை 2014 ஆண்டு திசெம்பர் 31 திகதி வரை அறவீடு செய்திருக்கவில்லை.

(உ) உள்ளூராட்சி நிறுவன தாய்ச் சங்கத்தினால் 1999 ஆண்டின் போது சபையில் இருந்து பெற்றிருந்த ரூபா 100,000 இற்கான தொகையினை திருப்பிப் பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அத்துடன் 2007 ஆண்டு முதல் பெற வேண்டிய வட்டித் தொகையினை கணக்கெடுத்தலும் கைவிடப்பட்டிருந்தது.

(ஊ) பல்வேறு அரச நிறுவனங்களில் இருந்து பெறவேண்டியிருந்த மூலதன உதவி ரூபா 13,314,380 தொகையில் 2002 ஆண்டு முதல் 2008 ஆண்டு வரை பெறவேண்டியிருந்த ரூபா 1,029,535 இற்கான தொகையினை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(எ) சபைக்குச் சொந்தமான கட்டிடங்கள் மற்றும் கடைகள் என்பவற்றை வாடகைக்கு கொடுக்கும் போது வாடகைக்கு பெற்றவர்களினால் கொடுப்பனவு மேற்கொள்ளத் தவறிய ரூபா 392,903 இற்கான தொகையினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஏ) அறவிடப்பட வேண்டிய ரூபா 1,323,113 இற்கான பதவியணிக் கடனை அறவீடு செய்வதற்காக முறையான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(ஐ) ஒரு வருட காலத்தை விட மிகையான காலம் முதல் காணப்படும் செலவுகள் மற்றும் வழங்கல்கள் கடன்கொடுத்தோரின் பெறுமதி ரூபா 10,656,834 ஆகும்.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-----------------------------------------------------------------

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த 04 கணக்கு விடயங்கள் தொடர்பாக கூட்டுத்தொகை ரூபா 298,626,272 ஆகிய மீதி, போதியளவு சான்றுகள் காணப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது.

2. நிதி மீளாய்வு

-----------------------

2.1 நிதி விளைவுகள்

-------------------------------

சமர்ப்பித்திருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 57,251,512 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 61,597,179 ஆகும். மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது முறையே ரூபா 42,730,279 உம் மற்றும் ரூபா 26,528,855 உம் மூலதன உதவி மற்றும் முறையே ரூபா 91,017,022 உம் மற்றும் ரூபா 86,083,268 இற்கான மூலதன செலவுகளை கணித்த பின்னர் அந்த மிகை முறையே ரூபா 8,964,769 உம் மற்றும் ரூபா 2,042,766 ஆக மாறியமையால் நிதி விளைவுகளில் ரூபா 6,922,003 இற்கான முன்னேற்றமொன்று காணப்பட்டது.

2.2 வருமான நிருவாகம்

-----------------------------------

2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

------------------------------------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு தொடர்பாக தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட நிலுவை வருமானம் தொடர்பான தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு திரண்ட நிலுவையாக வீதவரி 24.4 மில்லியன் ரூபாவும், வாடகை 2.1 மில்லியன் ரூபாவும் , ஏனைய வருமானங்கள் 175.9 மில்லியன் ரூபாவும் ஆகக் காணப்பட்டது.

2.2.2 வீத வரி

----------------

மீளாய்வாண்டிற்கான பில்போட்டப்பட்ட வீதவரி தொகை ரூபா 15,772,205 இனால் அண்மித்த நூற்றிற்கு 62 இற்கான சதவீதமான ரூபா 9,817,688 தொகை ஒன்று அறவீடு செய்யப்பட்டிருந்தது. அதே போல் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சபையின் ஒட்டுமொத்த வீதவரி நிலுவை ரூபா 24,431,535 ஆகும்.

2.2.3 முத்திரைக் கட்டணம்

------------------------------------

(அ) மாகாண சபையினால் பதிவாளர் நாயகத்திடம் அறவீடு செய்திருந்த முத்திரைக் கட்டணத்தில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த முத்திரைக் கட்டணப் பெறுமதி ரூபா 107,429,016 ஆகும்.

(ஆ) முத்திரைக் கட்டணம் பெற்றுக் கொள்ளும் போது காணிப் பதிவு அலுவலகத்தில் இருந்து கிடைக்க வேண்டிய தொகையொன்று என சான்றுபடுத்திய தொகையை விட குறைந்த தொகை ஒன்று வடமேல் மாகாண வருமானத் திணைக்களத்தில் இருந்து பிரதேச சபைக்கு வழங்கியிருந்ததென அவதானிக்கப்பட்டது. இதன் பிரகாரம் 2009 ஆண்டு முதல் 2013 ஆண்டு வரை மொத்தமாக 12 மில்லியன் ரூபாவை விடக் கூடிய தொகை ஒன்றினை சபை இழந்துள்ளது.

2.2.4 நீதிமன்றத் தண்டப் பணம்

-------------------------------------------

மாகாண பிரதான செயலாளரிடம் 2014 ஆண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த 2002 ஆண்டிற்கான நீதிமன்றத் தண்டப் பணத்தின் பெறுமதி ரூபா 279,583 ஆகும்.

2.2.5 மிகை விதிப்பு

--------------------------

சபையின் முன்னைய தலைவர் மற்றும் செயலாளருக்கு எதிராக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் விதிக்கப்பட்டிருந்த மிகை விதிப்பு சான்றிதழ்கள் இரண்டு தொடர்பாக சபைக்கு ரூபா 1,805,437 தொகை ஒன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

-------------------------------------------------------

(அ) முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டின் வர்த்தக வரி பதிவேட்டின் பிரகாரம் வருமானம் சேகரிக்கப்படாமல் கைவிடப்பட்ட அநேக எண்ணிக்கையான வர்த்தக நிலையங்கள் சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது.

(ஆ) சபையில் சேவையாற்றி ஊழியர்களுக்காக ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்புத் தொகை செலுத்துவதில் தாமதத்தின் காரணமாக சபைக்கு விதிக்கப்பட்டிருந்த மிகை விதிப்பு மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 47,715 ஆகக் காணப்பட்டதுடன் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்புத் தொகை தாமதித்த காரணத்தினால் மீளாய்வாண்டிற்காக ரூபா 85,748 இற்கான மிகை விதிப்பு விதிக்கப்பட்டிருந்தது.

3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

--------------------------------------------------

2002 ஆண்டின் போது கொல்களம் ஒன்று நிர்மாணிப்பதற்காக காணி ஒன்று கொள்வனவு செய்வதற்காக ஒருவருக்கு ரூபா 150,000 வீதம் 04 நபர்களுக்கு ரூபா 600,000 முற்பணமாகச் செலுத்தப்பட்டிருந்த போதும் இது வரை இந்த காணியை உரித்தாக்குவதற்காக அல்லது அந்த பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

4. கணக்களிப் பொறுப்பும் நள்ளாளுமையும்

-----------------------------------------------------------------

பாதீட்டுக் கட்டுப்பாடு

-------------------------------

வருடாந்த பாதீட்டில் நிகழ்ச்சித் திட்டம் 4 இன் கீழ் ரூபா 4,950,000 இற்கான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த போதும், குறிப்பிட்ட செயற்திட்டத்தை அமுல்நடத்தியிருக்கவில்லை.

5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) பதவியணிக் கட்டுப்பாடு

(ஊ) ஒப்பந்த நிருவாகம்